2019 ஜனவரி 7]

கேட்டிருக்கிறார்கள். அது அரசினுடைய கொள்கை முடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதுகுறித்து முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***5394—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சி, திருமுடிக்கவுண்டனூரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சி, திருமுடிக்கவுண்டனூர் கிராமத்தில் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சி, திருமுடிக்கவுண்டனூரில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை என்று பதிலளித்துள்ளார். ஆனால், அங்கு ஏற்கெனவே வடிவமைக்கப்பட்ட காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளெல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், தற்போதைய நிலையில், மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், அதிகப்படியான மக்கள் தொகை இருப்பதால், அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மீண்டும் புனரமைப்பு செய்து, 30,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியனை ஊராட்சியில் மொத்தம் 40 குக்கிராமங்கள் உள்ளன. இந்த ஊராட்சியிலுள்ள 3,977 வீடுகளில் 15,800 எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கின்றனர். வெள்ளியனை ஊராட்சியில் 57 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், 30 சிறு மின்விசைப் பம்புகளும், 8 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும் உள்ளன. இந்தக் குடிநீர் அமைப்புகளின்மூலம் தினசரி 40 LPCD–க்குக் குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வெள்ளியனை ஊராட்சியிலுள்ள திருமுடிக்கவுண்டனூர் கிராமத்தில் மொத்தமுள்ள 84 வீடுகளில் 336 எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கின்றனர். இந்த குக்கிராமத்திற்கென 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இத்தொட்டிக்கு 7.5 எச்.பி. மின் மோட்டார் ஒன்றும், 5 எச்.பி. மின் மோட்டார் ஒன்றும் உள்ளது. இத்தொட்டியில் தினசரி

2019 ஜனவரி 7]

நீர் ஏற்றப்பட்டு, நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பொதுக் குழாய்கள்மூலம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நீர் வழங்கப்பட்டு வருகிறது. திருமுடிக்கவுண்டனூர் கிராமத்தில் 41 வீடுகளுக்கு தனிநபர் குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, தற்போதைய நிலையில், திருமுடிக்கவுண்டனூர் கிராமத்திற்குப் போதுமான அளவுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே வீடுகளெல்லாம் அதிகரித்திருக்கக்கூடிய சூழ்நிலையைச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து எதிர்காலத்தில் ஆய்வு செய்து, அவசியமிருப்பின், கண்டிப்பாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலனை செய்து மக்கள்தொகையின் அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசும், அதனுடன் ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவித்து, அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதனடிப்படையில், நேற்று எங்களுடைய கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முன்னிலையில் ஒரு தொகுதிக்கு ஓர் ஊராட்சி என்ற அடிப்படையில், அனைத்துத் தொகுதிகளிலும் பொங்கல் பரிசு தொகுப்பு விழாவைத் தொடங்கி வைத்து, எங்களுடைய மாவட்டத்தில் கிட்டத்தட்ட 2 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும், என்னுடைய கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் 71 ஆயிரத்து 283 குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கரூர் மாவட்டத்தில், கடவூர் ஒன்றியத்தில் 5 பஞ்சாயத்துகள் கஜா புயலால் பாதிக்கப்பட்ட நிலையில், தோட்டக்கலைத் துறையின் மூலமாகவும், விவசாயத் துறையின் மூலமாகவும் கிட்டத்தட்ட 16 இலட்சத்து 52 ஆயிரத்து 432 ரூபாய் மதிப்பீட்டில் 381 பயனாளிகளுக்கு சனிக்கிழமையன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நலத் திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்கும் என் தொகுதி மக்களின் சார்பாகவும், கடவூர் ஒன்றிய மக்களின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஒன்றியத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, போதும் நீங்கள் கேள்வியை விட்டு எங்கேயோ போகிறீர்கள். மூலக் கேள்வியையொட்டி கேளுங்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் பல்லாபாளையம் ஊராட்சியில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தருமாறும், கோயம்பள்ளி ஊராட்சி, ஏ.டி. காலனியில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஊராட்சிகளிலே அவசியமிருப்பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

2019 ஜனவரி 7]

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகராட்சியில் ஜே.சி.கே. நகரில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், காட்டாங்குளத்தூர் ஒன்றியம் வல்லம், கல்வாய், குமிளி ஊராட்சிகளில் 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், மறைமலை நகர் நகராட்சி, 15–வது வார்டு, பனங்காட்டூர் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய நகராட்சியில் உள்ள இரண்டு, மூன்று இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டித் தருமாறு கேட்டிருக்கிறார்கள். நீர்த்தேக்கத் தொட்டி கட்டும்போது* water source*–ன் அடிப்படையில்* pipeline *போட்டு மக்கள் தொகையின் அடிப்படையில்* water tank *கட்டுவார்கள். இப்போது* tank *மட்டுமே கட்டுமாறு கேட்கும்போது* water source *இருந்தால்தான் அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே இருக்கின்ற தண்ணீர்த் தொட்டிகள் பழுதடைந்திருந்தால் துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும். 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய நல்லாட்சியிலும் பார்த்தீர்களென்றால், கிட்டத்தட்ட 2,974 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு அவசியமிருக்கின்றதோ அந்த இடங்களிலெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்துத் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பாகோடு பேரூராட்சி, பாளையங்கட்டியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்—2—ன்கீழ் இயங்கும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் வழங்கு குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதனால் சாணிவிளை, கடந்தான்கோடு, சரல்விளை போன்ற பகுதிகளில் குடிநீர் விநியோகம் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. எனவே, அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் வழங்கு குழாய்களைப் புதிதாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பேரூராட்சியிலே துறை அதிகாரிகளால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, அவசியமிருப்பின், கண்டிப்பாக மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***16652—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?